RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 102 | ஏப்ரல்.19 2026 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# தமிழக மக்களை சொந்த நாட்டிலேயே அகதிகளாக்கப் பார்த்தது பாஜக : முதல்வர் சாடல்

சென்னை: ஏப்.19-

"தொகுதி மறுவரையறை மசோதா மூலம் தமிழ்நாட்டு மக்களைச் சொந்த நாட்டிலேயே அகதிகளாக்கப் பார்த்த பாஜகவுக்கும், அவர்களுடைய ஏவல் அடிமைகளான அதிமுகவுக்கும் 2026 சட்டமன்றத் தேர்தலில் மறக்கவே முடியாத மாபெரும் தோல்வியைக் கொடுப்போம்," என்று தமிழக முதல்வரும், திமுக தலைவருமான மு.க. ஸ்டாலின் குற்றஞ் சாட்டியுள்ளார்.

மத்திய அரசு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த தொகுதி மறுவரையறை மசோதா தோல்வியடைந்ததையடுத்து, இந்தியா கூட்டணி கட்சிகள் உள்ளிட்ட அனைத்து எதிர்கட்சித் தலைவர்கள், மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சித் தலைவர்கள் மற்றும் ஆதரவு அளித்த தமிழ்நாட்டு மக்களுக்கும் நன்றி தெரிவித்து திமுக தலைவரும் தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள வீடியோவில் கூறி இருப்பதாவது: 'Delimitation' எனும் கருப்புச் சட்டத்துக்கு எதிரான நம்முடைய போராட்டம் வெற்றி பெற்றிருக்கிறது. இந்த ஆபத்தை ஒரு வருடத்திற்கு முன்பே அறிந்து, இந்த வெற்றியைப் பெறுவதற்கான அனைத்துப் பணிகளையும் அப்போதே நாம் தொடங்கினோம்.

மாநில முதல்வர்கள் எதிர்க்கட்சித் தலைவர்கள் ஒருங்கிணைப்புக் கூட்டம் தொடங்கி, நேற்று முன்தினம் கருப்புக் கொடி ஏற்றி, கருப்புச் சட்ட நகலைக் கொளுத்தினேன்! அதேபோல், நேற்று திண்டுக்கலில் வெற்றிக்கான வெடியைக் கொளுத்தினேன்! தீ பரவட்டும் என்று சொன்னேன். அது நாடாளுமன்றம் வரை பற்றிக் கொண்டது.

50, 60களில் பார்த்த பழைய திமுகவைப் பார்க்க வேண்டி வரும் என்று எச்சரித்தேன். "அப்படி என்றால் என்ன?" என்று கேட்ட சில அரைவேக்காடுகளுக்கு, "இதுதான்டா திமுக பாருங்கள்" என்று நேற்று ஸ்ட்ராங்காகக் காட்டியிருக்கிறோம்.

தொகுதி மறுவரையறை என்ற பெயரில், முழுக்க முழுக்க பாஜகவுக்குச் சாதகமாகக் கொண்டு வரப்பட்ட கருப்புச் சட்டத்தை, நாடாளுமன்றத்தில் தோற்கடித்த அனைவருக்கும் தமிழ்நாட்டு முதல்வராக என்னுடைய நன்றி! நன்றி! நன்றி!

முக்கியமாக, இதில் முழுக்க முழுக்க என்னுடன் நின்ற தமிழ்நாட்டு மக்களுக்குத்தான் முதலில் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்ல வேண்டும்!

பெண்களுக்கான இடஒதுக்கீடு என்ற மாறுவேடத்தில் இந்தச் சட்டத்தை பாஜக கொண்டு வரப் பார்த்தார்கள். ஆனால், இந்த ஏமாற்றுத் திட்டத்தை முன்னின்று தோற்கடித்ததே பெண்கள்தான்! அவர்களுக்கு என்னுடைய சல்யூட்!

இந்தியா கூட்டணிக் கட்சிகள் உள்ளிட்ட அனைத்து எதிர்க்கட்சிகளின் எம்.பி.க்களும் ஒன்றாகச் சேர்ந்து நின்ற காரணத்தினால், இது சாத்தியமாகியிருக்கிறது. வடக்கு ‒ தெற்கு என நமக்குள்ளே பிளவை ஏற்படுத்தி, சண்டை போட்டுக் கொள்ள வைக்கலாம் என்று நினைத்தவர்களுக்குச் சரியான



சம்மட்டியடி கிடைத்திருக்கிறது. 12 ஆண்டுகளில் முதல் முறையாகப் பிரதமர் மோடி அரசு கொண்டு வந்த அரசியலமைப்புச் சட்டத் திருத்த மசோதா தோல்வியடைந்திருக்கிறது!

இது தொடக்கம்தான்! பாஜக இனி நாடு முழுக்கப் பெறப் போகும் தோல்விகளுக்கான தொடக்கம் இது! எதிர்க்கட்சிகளின் ஒற்றுமைக்கான தொடக்கம் இது! நாம் ஒன்றுபட்டால் வெற்றி உறுதி என நான் தொடர்ந்து சொல்லி வந்தேன். அது உண்மை எனக் காட்டியிருக்கும் தொடக்கம் இது!

இந்த நேரத்தில், நேற்று நாடாளுமன்றத்திலும், மக்கள் மன்றத்திலும் "பெண்கள் இடஒதுக்கீட்டுக்கும் இந்த மசோதாவுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. இது ஒரு தேச விரோதச் சட்டம். இதை அனுமதிக்க மாட்டோம். இதை அனைவரும் சேர்ந்து தோற்கடிப்போம்" எனத் தெளிவான உணர்வுகளை வெளிப்படுத்திய மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் அன்புச் சகோதரர் ராகுல் காந்தி, காங்கிரஸ் நாடாளுமன்றக் கட்சித் தலைவர் சோனியா காந்தி, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே ஆகியோருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காங்கிரஸ் மட்டுமல்ல, திரிணமூல் காங்கிரஸ் கட்சித் தலைவர் மம்தா பானர்ஜி, சமாஜ்வாடி தலைவர் அகிலேஷ், ஆம் ஆத்மி கட்சித் தலைவர் அரவிந்த் கேஜ்ரிவால், ராஷ்டிரிய ஜனதா தள செயல் தலைவர் தேஜஸ்வி, தேசியவாத காங்கிரஸ் செயல் தலைவர் சுப்ரியா சுலே, பிஜு ஜனதா தள தலைவர் நவீன் பட்நாயக், ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா தலைவர் ஹேமந்த் சோரன், ஜம்மு காஷ்மீர் தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவர் ஃபரூக் அப்துல்லா, சிவசேனா தலைவர் உத்தவ் தாக்கரே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி. ராஜா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ. பேபி, பி.ஆர்.எஸ் கட்சித் தலைவர் கே. சந்திரசேகர ராவ், சிரோமணி அகாலி தள தலைவர் சுக்பீர் சிங் பாதல் ஆகிய தேசியத் தலைவர்களுக்கும் என்னுடைய நன்றிகள்!

அதுவும், தொடக்கத்திலிருந்தே இந்த முயற்சியில் என்னுடைய கரங்களை வலுப்படுத்திய பினராயி விஜயன், ரேவந்த் ரெட்டி, சித்தராமையா, டி.கே. சிவகுமார் ஆகியோருக்கும், தமிழ்நாட்டில் இருக்கிற நம்முடைய கொள்கைத் தோழமைகளான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றிகள்!

இப்போது நாம் பெற்றிருப்பது பாதி வெற்றிதான்! 2001ஆம் ஆண்டில் செய்தது போன்றே, இப்போதும் அடுத்த 25 ஆண்டுகளுக்கு, அதாவது 2051 வரை, தொகுதி எண்ணிக்கையை மறுவரையறை செய்வதைத் தள்ளி வைக்க அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் கொண்டு வர வேண்டும்!

அதுமட்டுமல்ல, பெண்களின் இடஒதுக்கீட்டிற்காக 2023 ஆம் ஆண்டே நாம் ஆதரித்து நிறைவேற்றிய சட்டத்தை எந்த நிபந்தனைகளும் இல்லாமல், பாஜக அரசு உடனடியாக இப்போது இருக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கே அமல்படுத்த வேண்டும். அதுதான் முழு வெற்றியாக அமையும்! அதற்காகப் போராடுவோம்!

மகிழ்ச்சியான இந்த நேரத்தில், இந்தத் தொகுதி மறுவரையறைச் சட்டம், யாரெல்லாம் நம் நண்பர்கள் என மட்டும் அடையாளம் காட்டவில்லை; தமிழ்நாட்டின் துரோகிகள் யார் என்று அவர்கள் வாயாலேயே சொல்ல வைத்திருக்கிறது. அப்படித் துரோகம் செய்த பழனிசாமியின் அடிமைக் கும்பலுக்குத் தேர்தலுக்கு முன்பே படுதோல்வி கிடைத்திருக்கிறது. பழனிசாமி டெல்லியின் ஏஜெண்ட் என்பது மீண்டும் நிரூபணமாகியிருக்கிறது!

நம்முடைய திராவிட இயக்க வரலாறு என்ன? இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் முதல் சட்டத் திருத்தத்திற்குப் போராடி, இடஒதுக்கீட்டைக் கொண்டு வந்தது திமுக! எப்போதெல்லாம் இந்தித் திணிப்பு வருகிறதோ, அப்போதெல்லாம் உறுதியாகப் போராடி வென்றது திமுக!

அதே போன்றுதான், நேற்று தமிழ்நாட்டின் உரிமைகளை, பிரதிநிதித்துவத்தைத் தடுக்க நினைத்ததைப் போராடி வென்றிருக்கிறது திமுக! இந்தியாவே இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி உயர்வாகப் பேசுகிறது!

நம் வெற்றிகள் தொடரட்டும், தொடரும்! தமிழ்நாட்டு மக்களைச் சொந்த நாட்டிலேயே அகதிகளாக்கப் பார்த்த பாஜகவுக்கும், அவர்களுடைய ஏவல் அடிமைகளான அதிமுகவுக்கும் 2026 சட்டமன்றத் தேர்தலில் மறக்கவே முடியாத மாபெரும் தோல்வியைக் கொடுப்போம்! இவ்வாறு ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



## கல்லல் கிழக்கு ஒன்றியப் பகுதிகளில் வேட்பாளர் கருணாஸ்-க்கு உற்சாக வரவேற்பு

கல்லல், ஏப்.19-

சிவகங்கை சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர். முக்குலத்தோர் புலிப்படை கட்சி நிறுவனர் தலைவர் சேது.கருணாஸ் தனது சின்னமான உதயசூரியன் சின்னத்திற்கு ஆதரவு கோரி சிவகங்கை நகர். தெற்கு வடக்கு . காளையார்கோவில் வடக்கு . கிழக்கு ஒன்றியப் பகுதிகளில் தீவிர பிரச்சாரத்தை முடித்து விட்டு கல்லல் கிழக்கு ஒன்றியப் பகுதிகளான கல்லல். குருந்தம்பட்டு . தேவபட்டு . பொய்யலூர் . நாகவயல் . எஸ்ஸார்.பட்டணம் . விசாலயண்கோட்டை. கூத்தலூர் . வேப்பங்குளம் . ஆ.கருங்குளம் . வெற்றியூர் . சாத்தரசன்பட்டி . மேலப்பூங்குடி . பனங்குடி உள்ளிட்ட பல பகுதிகளில் தீவிர பிரச்சாரத்தை மேற்கொண்டு வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார்...

கல்லல் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் நா.நெடுஞ்செழியன் தலைமையில் நடைபெற்ற இந்த வாக்கு சேகரிப்பில் ஏராளமான பெண்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு ஆரத்தி எடுத்தும். கைத்தறியாடைகள் அணிவித்தும். பட்டாசு வெடித்தும். பெண்கள் குலவையிட்டும் வேட்பாளர் கருணாஸ் க்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்...

இந்த நிகழ்ச்சியின் போது காங்கிரஸ் வட்டார தலைவர் பாலு நடராஜன் . மாவட்ட பிரதிநிதி பனங்குடி ஜோஸப் . மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பரணிகிட்டு . முன்னாள் கவுன்சிலர் .முகவை கருணாநிதி . ஒன்றிய இளைஞரணி கட்டத்தேவன் கார்த்திக் அரண்மனை சிறுவயல் ராஜா . நாச்சியப்பன் . ஒன்றிய மகளிரணி அமைப்பாளர் திவ்யா செல்வராஜ் . துணை அமைப்பாளர்களான ஆனந்த் . உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்...

## 100 சதவீதம் வாக்களிக்க கோரி படகில் பயணம் செய்து கலெக்டர் விழிப்புணர்வு

திருப்பூர், ஏப்.19-

சட்டமன்ற தேர்தலில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை ஆண்டிபாளையம் படகு இல்லத்தில் படகில் பயணம் செய்து மாவட்ட கலெக்டர் மனிஷ் தொடங்கி வைத்தார். இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 திருப்பூர் மாவட்டத்திற்குட்பட்ட தாராபுரம் (தனி), காங்கயம், அவிநாசி (தனி), திருப்பூர் (வடக்கு), திருப்பூர் (தெற்கு), பல்லடம், உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம் ஆகிய 8 சட்டமன்ற தொகுதிகளுக்கு நடைபெற உள்ளது.

இதற்காக மாவட்டம் முழுவதும் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நாள்தோறும் நடைபெற்று வருகிறது. அந்த வகையில் நேற்று ஆண்டிபாளையம் படகு இல்லத்தில் மாவட்ட கலெக்டர் மனிஷ் படகில் பயணம் செய்து தேர்தலில் 100 சதவீதம் வாக்களிக்க கோரி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சங்கமித்திரை, சுற்றுலா அலுவலர் அரவிந்த்குமார், விளையாட்டு அலுவலர் ரகுக்குமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை உதவி இயக்குநர் (பயிற்சி) ஹர்சா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## அலுவலர்களாக உள்ள மத்திய அரசு ஊழியர்களுக்கு தமிழ், ஆங்கிலம் தெரியாததால் வாக்குப்பதிவு பணியில் சிக்கல் ஏற்பட வாய்ப்பு

சென்னை, ஏப்.19-

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்குச்சாவடி பணியில் தமிழ், ஆங்கிலம் தெரியாத மத்திய அரசு ஊழியர்களை நியமிப்பதால், வாக்குப்பதிவு பணியை மேற்கொள்வதில் சிக்கல் ஏற்பட வாய்ப்புள்ளதாக தேர்தல் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழகத்தில் 5.73 வாக்காளர்கள் உள்ளனர். தற்போது நடைபெற்று வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் 4,023 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். வரும் ஏப்.23ம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. அதற்காக தமிழகம் முழுவதும் 75,064 வாக்குச்சாவடிகள் தயார்படுத்தப்பட்டுள்ளன.

தேர்தல் பணியில் சுமார் 3.40 லட்சம் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் சுமார் 3 லட்சம் பேர் வாக்குச்சாவடி அலுவலர்களாக நியமிக்கப்பட்டு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வாக்குச்சாவடிகளிலும் உள்ள வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள், வாக்குச்சாவடியின் ஒட்டுமொத்தப் பொறுப்பாளர்களாக இருப்பர். வாக்குச்சாவடி அலுவலர்1, 2 மற்றும் 3 ஆகியோரும் பணியில் இருப்பார்கள்.

இந்த தேர்தலில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் மத்திய அரசின்கீழ் இயங்கும் கல்பாக்கம் அணுமின் நிலையம், ஆவடி படை உடை தொழிற்சாலை, கனரக வாகன தொழிற்சாலை, திருச்சி மற்று ராணிப்பேட்டையில் இயங்கும் பெல் நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் இதர மத்திய அரசு நிறுவனங்களில் பணியாற்றுவோர் வாக்குச்சாவடி அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு 2 கட்ட பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே ஒரு வாக்குசசாவடி தலைமை அலுவலர் மற்றும் அவர்கள்கீழ் பணியாற்றும் 3 அலுவலர்கள் என குழு உருவாக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கான வாக்குச்சாவடிகள் இணைய குலுக்கல் முறையில் விரைவில் ஒதுக்கப்பட உள்ளன.

இந்நிலையில், மத்திய அரசு நிறுவன ஊழியர்கள் பலருக்கு இந்தி மட்டுமே நன்றாக தெரிந்திருக்கிறது. சிலருக்கு ஆங்கிலம் கூட தெரியவில்லை. வாக்காளர் பட்டியல் தமிழில் மட்டுமே அச்சிட்டு வழங்கப்படுகிறது.

இதனால், இவர்களை வாக்குச்சாவடி அலுவலர் 3ல் மட்டுமே நியமிக்க முடியும். ஒரு வாக்குச்சாவடியில் இதுபோன்ற ஊழியர்கள் 2 பேர் வந்துவிட்டால், வாக்குச்சாவடி தலைமை அலுவலர் பாடு திண்டாட்டம்தான்.

எனவே தமிழ் தெரியாதவர்களை தேர்தல் பணியில் ஈடுபடுத்துவதை தவிர்க்கலாம் என தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.










# “திருப்பரங்குன்றத்தில் ‘இரண்டு மருமகள்கள்’ அரசியல் கூட்டணி! கிருத்திகாவுக்கு வாக்கு கேட்டு பிரேமலதா விஜயகாந்த்”

மதுரை, ஏப்.19-

மதுரை திருப்பரங்குன்றம் சட்டமன்றத் தொகுதியில் தேர்தல் சூடு அதிகரி த்துள்ள நிலையில், திமுக வேட்பாளர் கிருத்திகா தங்க பாண்டியனை ஆதரித்து தேசிய முற்போக் குதிராவிடர் கழக தலைவர் பிரேமலதா விஜயகாந்த் திருநகர் பகுதியில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது அவர் பேசுகையில், “கேப்டன் விஜயகாந்த் கட்சி தொடங் கிய முக்கியமான இந்தத் தொகுதிக்கு வருவது பெரும் மகிழ்ச்சி அளிக்கிறது. திருப்பரங்குன்றம் தொகுதிக்கு நானும், கிருத்திகா தங்க பாண்டியனும் இரண்டு மருமகள்களாக வந்துள்ளோம். எங்களை இருவரையும் வரவேற்று, உங்கள் வாக்குகளை கிருத்திகா தங்க பாண்டியனுக்கு அளித்து முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையிலான நல்லாட்சியை தொடரச் செய்ய வேண்டும்” என்றார்.

மேலும், பொதுமக்களின் கோரிக்கைகளை கருத்தில் கொண்டு மல்லிகை உற்பத்திக்கான சென்ட் பேக்டரி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், பகுதி மக்களின் அடிப்படை பிரச்சனைகள் விரைவில் தீர்க்கப்படும் என்றும் உறுதியளித்தார்.

# குன்னூரில் மாற்றுக் கட்சியை சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் பாரதியார் தலைமையில் தவெகவில் இணைந்தனர்



குன்னூர், ஏப்.19-

நீலகிரி மாவட்டம் குன்னூரில் மாற்றுக் கட்சியிலிருந்து தவெகாவில் இணைந்த தொண்டர்களை தமிழக வெற்றிக்கழக வேட்பாளர் தங்கராஜு சால்வை அணிவித்து வரவேற்றார். தமிழக வெற்றி கழக வேட்பாளர் தமிழக வெற்றி கழக குன்னூர் தொகுதி வேட்பாளராக வழக்கறிஞர் தங்கராஜு போட்டியிடுகிறார். இவர் நாள்தோறும் பொதுமக்களை சந்தித்து விசில் சின்னத்திற்கு ஆதரவு திரட்டி வருகிறார். குறிப்பாக குன்னூர் சுற்றுவட்டார பகுதியில் உள்ள பழங்குடியின கிராமங்களுக்கு நேரில் சென்று அவர்களுடைய குறைகளை கேட்டு தமிழக வெற்றி கழகம் ஆட்சிக்கு வந்தவுடன் பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்படும் என வாக்குறுதி அளித்து வருகிறார்.இந்த நிலையில் குன்னூர் கண்டோன்மென்ட் போர்டு முன்னாள் தலைவர் பாரதியார் ஏற்பாட்டில் ஜெகதளா பேரூராட்சியின் முன்னாள் தலைவரும், மகிளா காங்கிரஸ் கட்சி தலைவருமான பேபி, அதிமுகவின் அருவங்காடு பேரூராட்சி கிளைச் செயலாளர் ஜெர்ரி ஆகிய முக்கிய நிர்வாகிகள் உள்பட மாற்றுக் கட்சிகளை சேர்ந்த 100க்கும் மேற்பட்டோர் தமிழக வெற்றிக்கழக நீலகிரி மாவட்ட பொறுப்பாளர் ரமேஷ் மற்றும் குன்னூர் சட்டமன்ற தொகுதியின் தவெக வேட்பாளர் தங்கராஜு தலைமையில் தவெகவில் இணைந்து கொண் டனர். மாற்றுக் கட்சிகளில் இருந்து இணைந்தவர்களை தவெக வேட்பாளர் தங்கராஜு சால்வை அணிவித்து வாழ்த்து கூறி வரவேற்றார். அப்போது அவர் கூறியதாவது:

தமிழகத்தை நீண்ட காலங்களாக ஆட்சி செய்த திராவிட கட்சிகள் பெரும் கடன் சுமையில் தள்ளி உள்ளது. பொதுமக்களுக்கு பல இடங்களிலும் அடிப்படை வசதிகள் இல்லை. இந்த பிரச்சினைகளை சரி செய்ய தமிழகத்தில் மாற்று சக்தியாக தலைவர் விஜய் தலைமையில் தவெக வந்துள்ளது. தமிழக வெற்றி கழகத்திற்கு சிறப்பான எதிர்காலம் உள்ளது. வருகிற சட்டமன்றத் தேர்தலில் தமிழக வெற்றி கழகம் பெரும்பான்மை இடங்களில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும். எனவே உறுப்பினர்கள் ஆர்வமுடன் செயல்பட வேண்டும் என கூறினார்.



■ இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 நடைபெறவுள்ளதையொட்டி, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் (ஹெலிபேடு அருகில்) இன்று மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் வாக்களிப்பது தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திடும் விதமாக வாக்காளர் விழிப்புணர்வு வாக்கத்தான் பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்து, பேரணியில் பங்கேற்றார். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜி.சந்தீஷ். கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திவ்யான்ஷீநிகம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் பாபு ஆகியோர் உடனிருந்தனர்



■ நீலகிரி மாவட்டம் கோத்தகிரி ஜான்சன் சதுக்கத்தில் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் குன்னூர் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் கே.எம்.ராஜூ, கூடலூர் தொகுதி திமுக வேட்பாளர் மு.திராவிடமணி, உதகை தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் பி.ராமசந்திரன் ஆகியோரை ஆதரித்து வாக்கு சேகரித்தார்.



உதகை வாக்குகள் எண்ணும் மையமான அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டு வரும்

# பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு

உதகை, ஏப்.19-

உதகை வாக்குகள் எண்ணும் மையமான அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026யில் பதிவான வாக்குகளை எண்ணும் மையமான உதகை அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகளை, மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்திய தேர்தல் ஆணையம் எதிர்வரும் 23.04.2026 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் வாக்குப்பதிவு நடைபெறும் எனவும், 04.05.2026 அன்று வாக்கு எண்ணிக்கை நடைபெறும் எனவும் அறிவுறுத்தியதை தொடர்ந்து, நீலகிரி மாவட்டத்தில் தேர்தல் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், 108 உதகமண்டலம், 109 கூடலூர், 110 குன்னூர் ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதிகளில் பதிவாகும் வாக்குகளை, வாக்கு எண்ணும் மையமான உதகை அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் கொண்டு வந்து பாதுகாப்பாக வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். குறிப்பாக, வாக்கு எண்ணும் மையத்தில் உள்ள வாக்கு எண்ணும் அறை, தபால் வாக்குகள் எண்ணும் அறை, வைக்கும் அறை, பொருட்கள் வைக்கும் பாதுகாப்பு அறை, வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்படும் அறை உள்ளிட்டவைகளையும், அலுவலர்கள், முகவர்கள் வந்து செல்லும் பாதை மற்றும் அடிப்படை வசதிகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, தொடர் மின்வசதி, வாக்கு எண்ணும் மையத்தில் சிசிடிவி கண்காணிப்பு கேமராக்கள் வைக்கப்படும் இடங்கள் ஆகியவற்றை சம்மந்தப்பட்டவர்களிடம் கேட்டறிந்தார்.

இந்நிகழ்வில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.எஸ்.நிஷா கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) லோகநாயகி, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் ரமேஷ் உட்பட பலர் உடனிருந்தனர்





# அதிமுக கூட்டணி ஐ ஜே கே வேட்பாளர் வழக்கறிஞர் வெங்கடேசனுக்கு அதிமுக கீழ்கட்டளை பகுதி கழக செயலாளர் சந்திரசேகர் ராஜா உற்சாக வரவேற்பு

கீழ்கட்டளை, ஏப். 19-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கீழ்கட்டளை பகுதியில் உள்ள அனைத்து பகுதிகளிலும் ஐ ஜே கே வேட்பாளர் வழக்கறிஞர் வெங்கடேசன் திறந்த வெளி வாகனம் மூலமாக நின்று கொண்டு இரட்டை இலை சின்னத்துக்கு வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார் அவருக்கு அதிமுக கீழ்கட்டளை பகுதி கழக செயலாளர் சந்திரசேகர் ராஜா வேட்பாளருக்கு கேரளா சந்தா மூலங்கள் வைத்து பெண்கள் ஆர்த்தி எடுத்து மலர் தூவி மாலை அணிவித்து உற்சாக வரவேற்பு அளித்தார் மேலும் இந்த நிகழ்ச்சியில் பல்லாவரம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தன்சிங், பாட்டாளி மக்கள் கட்சி மாவட்ட தலைவர் வெங்கடேசன், பல்லாவரம் பகுதி கழகச் செயலாளர் ஜெயபிரகாஷ், மற்றும் இந்திய ஜனநாயக கட்சியின் பல்லாவரம் சட்டமன்ற தொகுதி மாவட்ட தலைவர் பன்னீர்செல்வம் உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் ஏராளமான கலந்து கொண்டு இரட்டை இலை சின்னத்துக்கு வாக்கு சேகரிப்பு ஈடுபட்டனர்.

# ஜோலார்பேட்டை திமுக வேட்பாளரை ஆதரித்து அமைச்சர் தீவிர வாக்கு சேகரிப்பு!



திருப்பத்தூர், ஏப்.19

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டையில் உள்ள கடைத் தெரு, நாயனசெரு பகுதியில் ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் கவிதா தண்டபாணியை ஆதரித்து அமைச்சர் ஏ.வ.வேலு பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது அவர் பேசியபோது மத்திய அரசின் விலைவாசி உயர்வு மத்திய அரசு தமிழகத்திற்கு நிதி ஒதுக்காத கண்டித்தும் எடப்பாடி பழனிச்சாமி முதல்வராக இருக்கும்போது கொரோனா காலகட்டத்தில் மக்களை வஞ்சித்தும் 58 வயதிற்கு மேல் உள்ள முதியவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்காததை சுட்டி காட்டினார் . மேலும் முதல்வர் ஸ்டாலின் பெண்களுக்கு இலவச பயணம் மகளிர் உரிமைத்தொகை தற்போது திமுக ஆட்சி அமைந்த உடன் ரூபாய் 8000/ கூப்பன் வழங்கப் போவதையும் அறிவித்தார் பின்னர் இந்நிகழ்வில் மாவட்டக் கழக செயலாளர் தேவராஜி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தேர்தல் குழு பொறுப்பாளர் தாமரைச்செல்வன், மாவட்டத் துணைச் செயலாளர் சம்பத், நகரச் செயலாளர் அன்பழகன், நகர மன்ற தலைவர் காவியா விக்டர், ஒன்றிய கழகச் செயலாளர்கள் சதீஷ்குமார், சூரியகுமார், உமாகன்ரங்கம், சுரேஷ்குமார், பேரூர் நகர இளைஞரணி அமைப்பாளர் ஸ்ரீ கீர்த்தி ராஜன், கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, 100 சதவீதம் வாக்களிப்பதை வலியுறுத்தி சேலம் எமரால்டு வேலி பள்ளி அருகில் நான்கு சக்கர வாகன விழிப்புணர்வு பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் அ.அருண் தம்புராஜ். தொடங்கி வைத்தார்கள்.







# தொகுதி மறுவரையறை மசோதா தோல்வி: முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்து கிருஷ்ணகிரியில் திமுகவினர் பட்டாசு வெடித்து கொண்டாட்டம்

கிருஷ்ணகிரி, ஏப்.19-

தொகுதி மறுவரையறை மசோதா தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, தமிழக உரிமைகளை பாதுகாத்த தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் கிருஷ்ணகிரியில் திமுகவினர் உற்சாகமாக கொண்டாடினர்.

கிருஷ்ணகிரி ரவுண்டானா அருகே நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், கிருஷ்ணகிரி திமுக கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளருமான மதியழகன் எம்.எல்.ஏ. தலைமையில், கட்சியினர் திரளாகக் கூடினர். அவர்கள் பட்டாசுகள் வெடித்து, இனிப்புகள் வழங்கி, கோஷங்கள் எழுப்பி மகிழ்ச்சி தெரிவித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் பேசியவர்கள், ஒன்றிய அரசின் சதியாக கருதப்பட்ட தொகுதி மறுவரையறை முயற்சியை எதிர்த்து, தமிழகத்தின் உரிமைகளை காக்கத் தைரியமாக போராடி வெற்றி பெற்ற முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையை பாராட்டினர். மேலும், இந்த வெற்றி தமிழ்நாட்டின் அரசியல் மற்றும் சமூக நீதிக்கான முக்கியமான முன்னேற்றமாகும் என தெரிவித்தனர்.

நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் பார். இளங்கோவன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு உரையாற்றினர். தொடர்ந்து திமுக நகர நிர்வாகிகள் அஸ்லாம், வேலுமணி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தினேஷ் ராஜன், மாவட்டத் துணைச் செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி, கடலரசு மூர்த்தி, ஒன்றிய செயலாளர் மகேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த கொண்டாட்டம் மூலம், தமிழக உரிமைகளை பாதுகாக்கும் திமுக அரசின் முயற்சிக்கு பொது மக்கள் மத்தியில் மேலும் ஆதரவு பெருகியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.



■ தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 நடைபெறுவதை முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டு அரங்கில், "தேர்தல் திருவிழா தமிழகத்தின் பெருவிழா" என்ற தலைப்பின் கீழ், 100 சதவிகிதம் வாக்குப்பதிவு வலியுறுத்தி மாவட்ட நிர்வாகத்துடன் பிசினஸ் நெட்வொர்க் இன்டர்நேஷ்னல் மற்றும் டாக்டர் மூன்ஸ் சாரிடபுள் அறக்கட்டளை இணைந்து சுமார் 2500 நபர்கள் பங்கு பெற்ற மாபெரும் விழிப்புணர்வு நடைபயண பேரணியை (Pinkk - Inkk RunN) மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் இன்று (18.04.2026) கொடியசைத்து துவக்கி வைத்து நடைபயணத்தில் கலந்துக்கொண்டார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தங்கதுரை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதா உள்ளிட்ட பலர் உள்ளனர்.



# பழனியில் அனல் பறக்கும் தேர்தல் களம் : ஜேசிபி மூலம் 100 கிலோ பூக்கள் தூவி அமைச்சருக்கு உற்சாக வரவேற்பு

திண்டுக்கல், ஏப்.19-

திண்டுக்கல் மாவட்டம் பழனி சட்டமன்றத் தொகுதியில் தேர்தல் களம் அனல் பறக்கிறது. மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சிபிஐ(எம்) வேட்பாளர் பாண்டியை ஆதரித்து, உணவு வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி இன்று தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

பழனி நகரின் முக்கிய வீதிகள் வழியாக அமைச்சர் வாக்கு சேகரித்து வந்தபோது,பழனி நகரின் 7வது வார்டில் அமைச்சர் நுழைந்தபோது, திமுக கவுன்சிலர் சுரேஷ் தலைமையில் நூதன வரவேற்பு அளிக்கப்பட்டது. சுமார் 100 கிலோ பூக்களை ஜேசிபி இயந்திரம் மூலம் தொண்டர்கள் தூவ, பூ மழையில் நனைந்தபடி அமைச்சர் வாக்கு சேகரித்தார்.இந்நிகழ்வில் தீக்கதிர் மதுக்கூர் ராமலிங்கம் ஆசிரியர். நகர்மன்ற தலைவர். மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டு வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்

யமேலும் தேர்தல் நெருங்கி வரும் வேளையில், அமைச்சரின் இந்த அதிரடி பிரச்சாரமும், தொண்டர்களின் பிரம்மாண்ட வரவேற்பும் பழனி தொகுதியில் பெரும் கவனத்தை ஈர்த்துள்ளது.



■ தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 நடைபெறுவதை முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டு அரங்கில், "தேர்தல் திருவிழா தமிழகத்தின் பெருவிழா" என்ற தலைப்பின் கீழ், 100 சதவிகிதம் வாக்குப்பதிவு வலியுறுத்தி மாவட்ட நிர்வாகத்துடன் பிசினஸ் நெட்வொர்க் இன்டர்நேஷ்னல் மற்றும் டாக்டர் மூன்ஸ் சாரிடபுள் அறக்கட்டளை இணைந்து சுமார் 2500 நபர்கள் பங்கு பெற்ற மாபெரும் விழிப்புணர்வு நிகழ்ச்சி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் தலைமையில் இன்று (18.04.2026) நடைபெற்றது. உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தங்கதுரை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதா, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அலுவலர் அமீர்பாஷா உள்ளிட்ட பலர் உள்ளனர்.



# பல்லாவரம் 13வது வார்டு திமுக சார்பில் கூட்டணி கட்சி தேமுதிக வேட்பாளர் அனகை முருகேசன் தீவிர வாகனம் பிரச்சாரம்

பல்லாவரம், ஏப்.19-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகரம் பல்லாவரம் 13வது வார்டு பகுதியில் திமுக கூட்டணியின் பல்லாவரம் சட்டமன்ற தேமுதிக வேட்பாளர் அனகை முருகேசன், பல்லாவரம் சட்டமன்றத் உறுப்பினர் இ.கருணாநிதி, 2வது மண்டல குழு தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, ஆகியோர் வாகனத்தில் நின்று உங்கள் வேட்பாளர் அனகை முருகேசன் உங்களது சின்னம் முரசு அனைத்து வார்டுகளில் உள்ள பொதுமக்களை சந்தித்து வாக்கு சேகரித்தனர். பிரச்சாரத்தின் போது 13வது வார்டு மாமன்ற உறுப்பினர் ரேணுகாதேவி பரமசிவம் மற்றும் 13வது வட்டக் கழகச் செயலாளர் பரமசிவம் ஆகியோர் ஆகியோர் ஏற்பாட்டில் மலர்மாலை மற்றும் சால்வை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதில் மாவட்ட நிர்வாகிகள் 13வது வார்டு நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கழக கொடியுடன் ஏந்தியவாறு இருசக்கர வாகனத்தில் முரசு சின்னத்திற்கு வாக்களிக்குமாறு கேட்டுகொண்டு பேரணியாக சென்றனர்

# தூத்துக்குடி மாவட்டத்தில் பறக்கும் படையினரால் இதுவரை ரூ.1.23 கோடி பறிமுதல்: மாவட்ட ஆட்சியர் தகவல்!

தூத்துக்குடி, ஏப்.19-

தமிழக சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு, தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ள நிலையில், தூத்துக்குடி மாவட்டத்தில் இதுவரை ரூ.5,62, 282 மதிப்பிலான மதுபானங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. தமிழக சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு, தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ள நிலையில், தூத்துக்குடி மாவட்டத்தில் பறக்கும் படைகள் மற்றும் நிலையான கண்காணிப்புக் குழுவினர் தீவிர சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்று (17.4.2026) வரை பறக்கும் படையினரால் கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் பொருட்களின் விவரங்கள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர், மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்ததாவது: பறிமுதல் செய்யப்பட்ட மொத்த ரொக்கம்: ரூ.1 கோடியே 23 லட்சத்து 518. பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு: ரூ.16 லட்சத்து 12 ஆயிரத்து 162. பறிமுதல் செய்யப்பட்ட மது பானங்களின் மதிப்பு: ரூ.5 லட்சத்து 62 ஆயிரத்து 282.

தேர்தல் விதிமீறல்களைக் கண்காணிக்கவும், வாக்காளர்களுக்குப் பணம் மற்றும் பொருட்கள் விநியோகம் செய்யப்படுவதைத் தடுக்கவும் கண்காணிப்புப் பணிகள் தொடர்ந்து தீவிரப்படுத்தப்படும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



■ கிருஷ்ணகிரி ராயக்கோட்டை சாலையில் கிருஷ்ணகிரி தொகுதி மதச்சார்பற்ற கூட்டணி காங்கிரஸ் வேட்பாளர் டாக்டர்.செல்லகுமார் வணிக நிறுவனங்களில் "கை" சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்



# இல்லங்கள் தோறும் சென்றடைந்த திட்டங்கள்: வாக்குறுதிகளை நிறைவேற்றும் ஒரே கட்சி தி.மு.க. பர்கூரில் மதியழகன் எம்.எல்.ஏ. பிரசாரம்

கிருஷ்ணகிரி, ஏப்.19-

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் தி.மு.க. வேட்பாளர் மதியழகன் எம்.எல்.ஏ. தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். மக்களை நேரில் சந்தித்து, தி.மு.க. அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்து விளக்கி, ஆதரவை கேட்டுக் கொண்டார்.

இந்த பிரசாரத்தின் போது, தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகளுடன் இணைந்து வீடு தோறும் சென்று வாக்கு சேகரித்தார். மக்களிடம் பேசும் போது, தற்போதைய தி.மு.க. ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட நலத்திட்டங்கள் அனைத்தும் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் உள்ளதாகவும், அவை உண்மையாகவே இல்லங்கள் தோறும் சென்றடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

முன்னதாக, த.வெ.க. உள்ளிட்ட பல்வேறு மாற்று கட்சிகளைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்டோர் மதியழகன் எம்.எல்.ஏ. முன்னிலையில் தங்களை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர். அவர்களுக்கு கட்சி துண்டு அணிவித்து வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின்னர் அவர் பேசியதாவது:

"கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தி.மு.க. அரசின் திட்டங்கள் இல்லந்தோறும் சென்றடைந்துள்ளன. வீதி பிரசாரத்தின் போது பெண்கள் உட்பட பொது மக்கள் தன்னார்வமாக தி.மு.க.வுக்கு ஆதரவு தெரிவித்துக் கொண்டிருக்கின்றனர். பல்வேறு கட்சிகள் தேர்தல் வாக்குறுதிகளை கூறினாலும், அவற்றை நடைமுறைப்படுத்தும் திறன் தி.மு.க.க்கு மட்டுமே உள்ளது என்பதை மக்கள் நன்கு புரிந்துள்ளனர்.

இதனால் தான் பல்வேறு கட்சிகளில் இருந்தவர்கள் தி.மு.க.வில் இணைந்து வருகின்றனர். கட்சியில் இணையும் அனைவருக்கும் நல்ல வாய்ப்புகளும், மக்கள் சேவைக்கான இடமும் வழங்கப்படும்" என்றார்.

இந்த பிரசாரத்தில் கட்சி நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டு உற்சாகமாக செயல்பட்டனர்.

# தமிழகத்தில் மீண்டும் நல்லாட்சி மலர்ந்திட எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க. கூட்டணிக்கு வாக்களியுங்கள்: வேப்பனப்பள்ளி தொகுதி வேட்பாளர் கே.பி.முனுசாமி பிரசாரம்

கிருஷ்ணகிரி, ஏப்.19-

வேப்பனப்பள்ளி சட்டசபை தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் கே.பி. முனுசாமி எம். எல்.ஏ. மகாராஜகடை, நார்லப்பள்ளி, ஏக்கல்நத்தம் மலைகிராமங்களில் பிரசாரம் மேற்கொண்டார். அப்போது பொதுமக்களிடம் அவர் பேசியதாவது:

கடந்த 5 ஆண்டு கால தி.மு.க. ஆட்சியில் தமிழகத்தில் எவ்வித முன்னேற்றமும் இல்லை தமிழக முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு, ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளிலும் ஈடுபடவில்லை. கிருஷ்ணகிரி மாவட்டத்தை



பொறுத்தவரை, தி.மு.க. ஆட்சியில் புதிய திட்டங்கள் எதுவும் கொண்டு வரப்படவில்லை. எடப்பாடி பழனிசாமி முதல்அமைச்சராக இருந்தபோது, தென்பெண்ணை ஆற்றிலிருந்து கொடியாளம் அணைக்கட்டு வழி வழியாக, மின் மோட்டார்கள் மூலம் தண்ணீரை ஏற்றிஒசூர் மற்றும் வேப்பனப்பள்ளி ஆகிய 2 தொகுதிகளில் உள்ள ஏரிகளுக்கு வழங்கும் திட்டத்திற்காக ரூ.300 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. ஆழியாளம், எண்ணேக்கொள் கால்வாய் திட்டப்பணிகள் இன்னும் முழுமை பெறவில்லை. கொடியாளம் திட்டம் மின் மோட்டார் தொடர்பாக பொறியியல் விளக்கங்கள் தேவைப்பட்டதால் நிறுத்தி வைக்கப்பட்டது. தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளது. தமிழகத்தில் மீண்டும் நல்லாட்சி மலர்ந்திட எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க. கூட்டணிக்கு வாக்களிக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.





# சிவகங்கை வாரச்சந்தையில் தேர்தல் விழிப்பணர்வு துண்டு பிரசுரம் வழங்கும் விழா

சிவகங்கை, ஏப்.19-

சிவகங்கை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் வழிகாட்டுதலின்படி சிவகங்கை வாரச்சந்தை வளாகத்தில் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பாக தேர்தல் விழிப்புணர்வு பிரசுரம் வழங்கும் விழா நடைபெற்றது. தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டம் சார்பாக "*என் வாக்கு விற்பனைக்கு அல்ல*" என்ற தலைப்பில் விழிப்புணர்வு பிரச்சாரம் மற்றும் துண்டு பிரசுரம் வழங்கும் விழா தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட வழங்கல் அலுவலர் பழனிகுமார் தேர்தல் விழிப்புணர்வு பிரச்சாரத்தை தொடங்கி வைத்தார். சிவகங்கை மாவட்ட வழங்கல் அலுவலரின் நேர்முக உதவியாளர் புஷ்ப லீலா தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டப் பொருளாளர் சாஸ்தா சுந்தரம் முன்னிலை வகித்தனர். கவிஞர் தமிழ்க்கனல் தேர்தல் ஆணையம் வெளியிட்ட பாடல்கள் பாடி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். சிவகங்கை கிளைச் செயலாளர் ராஜசரவணன் மாவட்ட துணைச் செயலாளர் ஆரோக்கியமேரி காளையார்கோவில் கிளை உறுப்பினர் பாண்டியன் மற்றும் தேர்தல் விழிப்புணர்வு தன்னார்வலர்களும் வாரச்சந்தைக்கு வருகை புரிந்த பொதுமக்களிடம் துண்டு பிரசுரங்கள் கொடுத்து வாக்காளராக இருப்பதில் பெருமிதம் கொள்ளுங்கள். ஏப்ரல் 23 ஆம் தேதி வாக்களிக்க தயாராகுங்கள்.100% தவறாமல் வாக்களிப்போம் வாரீர் என விழிப்புணர்வை ஏற்படுத்தினார்கள்.



■ மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரியில் மதுரை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன் குமார்,இ.ஆ.ப., தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள் மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்கள் நிலை1, நிலை2, நிலை3 ஆகியோர்களுக்கு நடைபெறும் தேர்தல் பணிகள் குறித்த பயிற்சி வகுப்பு நடைபெறுவதையும்,மேலும் இந்த பயிற்சி மையத்திலேயே அவர்கள் தங்களின் தபால் வாக்குச்சீட்டுகளைப் பெற்று, அதே இடத்திலேயே தங்கள் வாக்குகளைப் பதிவு செய்வதையும் பார்வையிட்டார்.

Format C-1

(for candidate to publish in Newspapers, TV )

Declaration about criminal cases

(As per the judgement dated 25th September, 2018, of Hon'ble Supreme Court in WP (Civil) No. 536 of 2011 (Public Interest foundation &Ors. Vs Union of India &Anr.)

Name and address of candidate: M.காளீஸ்வரன்
S/oமுத்தையா
கதவு எண்..1421, அண்ணா நகர்
பனங்காடி ரோடு, சிவகங்கை தாலுகா
சிவகங்கை மாவட்டம்-630 561

Name of Political party : சுயேட்சை

Name of Election : General Election to Tamil Nadu Legislative Assembly -2026

Name of Constituency : 186 – சிவகங்கை

I, M.KALEESWARAN, a candidate for the abovementioned election, declare for public information the following details about my criminal antecedents:

(A) Pending criminal Cases

| Sl.no. | Name of Court | Case No. and dated | Status of Case(s) | Section(s) of the Acts Concerned and Brief Description of Offence(s) |
|---|---|---|---|---|
| 1 | சிவகங்கை கூடுதல் மாவட்ட நீதிமன்றம் | SC 47/2026 மாற்றும் CBCID குற்ற எண்.1/2014 | Pending | U/S 147,148, 294(b), 302, 120(b) |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

(B)Details about cases of conviction for criminal offences

| Sl.No | Name of Court & date(s) of order(s) | Description of offence(s) & punishment imposed | Maximum Punishment Imposed |
|---|---|---|---|
| 1 | இல்லை | இல்லை | இல்லை |
| 2 | இல்லை | இல்லை | இல்லை |
| 3 | இல்லை | இல்லை | இல்லை |

# நாளுக்கு நாள் கருணாஸ் க்கு பெருகிவரும் மக்களின் ஆதரவு: ஒசெ.மந்தக்காளை தலைமை தமறாக்கி வடக்கு ரவி. ஆறுமுகம் ஏற்பாடு

சிவகங்கை, ஏப்.19-

சிவகங்கை சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் முக்குலத்தோர் புலிப்படை கட்சி நிறுவனர் தலைவர் சேது கருணாஸ் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார்...

சிவகங்கை தொகுதியில் பாதிக்கும் மேற்பட்ட பகுதிகளில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு தனது தேர்தல் பரப்புரையை முடித்து விட்ட நிலையில். நேற்றைய தினம் சிவகங்கை மேற்கு ஒன்றியச் செயலாளர். ஊராட்சி முன்னாள் தலைவர் கண்டாங்கிபட்டி பெ.மந்தக்காளை தலைமையில் மேற்கு ஒன்றியப் பகுதிகளான உசிலம்பட்டி. சிவல்பட்டி . முனியாண்டிபட்டி . கூட்டுறவுபட்டி .தேவன்கோட்டை . மேட்டுப்பட்டி . மலம்பட்டி . கட்டாணிப்பட்டி . ஒக்குப்பட்டி . மாணிக்கம் பட்டி . வி.புதுப்பட்டி . கொத்தங்குளம் . தமறாக்கி தெற்கு . தமறாக்கி வடக்கு . பர்மா காலனி கண்டாங்கிபட்டி . வாகுளத்துப்பட்டி . முடிகண்டம் . மீனாட்சிபுரம் . உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் உதயசூரியன் சின்னத்தில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வந்தார்...



இதனிடையே வடக்கு தமறாக்கியில் ஊராட்சி மன்ற மேனாள் தலைவரும் சிவகங்கை திமுக விவசாய தொழிலாளரணி மாவட்ட துணை அமைப்பாளருமான தமறாக்கி ரவி மற்றும் தமறாக்கி கிளைக் கழக செயலாளர் ஆறுமுகம் ஆகியோரது ஏற்பாட்டில் வேட்பாளர் சேது.கருணாஸ்க்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது...

இது தமறாக்கி நாட்டின் வரலாற்றில் மிகவும் முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது...

இதுவரைக்கும் அதிமுக கோட்டையாகவே விளங்கி வந்த தமறாக்கியானது இந்த முறை திமுக வேட்பாளருக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது...

தவிர இப்பகுதியில் வாழும் பெரும்பாலான கள்ளர் சமூகத்தைச் சேர்ந்த ஒருவரான கண்டாங்கிபட்டி ஊராட்சியின் மேனாள் தலைவர் கண்டாங்கிபட்டி பெ.மந்தக்காளை அம்பலக்காரரை திமுக வானது ஒன்றியச் செயலாளராக நியமித்துள்ளது... தவிர இந்த சிவகங்கை தொகுதியின் வெற்றி தோல்விகளை நிர்ணயிக்கும் ஒரு மாபெரும் சக்தியாகவே விளங்கி வருகிறது என்பதே நிதர்சனமான உண்மையாகும்...

கழக ஆட்சியின் திட்டம் மற்றும் சாதனைகள் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வித செயல்பாடுகள் இப்படி பெண்களுக்கு என ஒவ்வொரு விசயத்தையும் பார்த்து பார்த்து செய்கிற தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் திராவிட மாடல் ஆட்சி இப்படி எல்லாமே சேர்ந்து கழக ஆட்சியை மீண்டும் கொண்டு வரும் விதமாகவே இந்த ஆதரவை பார்க்க முடிகிறது....

இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க பெண்களது ஏகோபித்த ஆதரவு என்பது வேட்பாளர் கருணாஸை வெற்றியின் அருகில் கொண்டு செல்கிறது...

இந்த நிகழ்ச்சியின் போது மாவட்ட நிர்வாகிகளான முன்னாள் சேர்மன் முத்துராமலிங்கம் . மஞ்சுளா பாலச்சந்தர் . பவானி கணேசன். மார்கரேட் கமலா பத்தினாதன். முன்னாள் கவுன்சிலர் பத்மாவதி பிரபாகரன் . மாவட்ட இளைஞரணி கிங் கார்த்திக் .பொருளாளர் பாண்டியராஜா . அரசனூர் அய்யப்பன் . ஐடி விங் வாடி வாசல் முத்துவேல் செல்வம். ஐடி விங் தமறாக்கி அம்பலம். இளைஞரணி திரவியம். அசல்ராஜா .பாபு நாகராஜன் . ஊராட்சி மேனாள் துணைவேந்தர் மீனாட்சிபுரம் தமிழரசன் . கண்டாங்கிபட்டி நாராயணன் போதி ராஜா. சரவணன் . உள்ளிட்ட ஏராளமான திமுகவினர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்...





■ சிவகங்கையில் காவல்துறையினர், மற்றும் ஹோம் கார்ட் அனைவரும் தங்களுடைய தபால் ஓட்டுகளை சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் செலுத்தினர்.



# தாம்பரம் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் கிருத்திகா தேவி 50வது வார்டு பகுதியில் உதயசூதி சின்னத்தில் வாக்கு சேகரித்தனர்

தாம்பரம், ஏப்.19-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி 50வது வார்டு முழுவதும் மனிதநேய மக்கள் கட்சி மாநில துணைப் பொதுச் செயலாளர் தாம்பரம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் தாம்பரம் எம்.யாக்கூப் அவர்கள் தலைமையில் தாம்பரம் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் டாக்டர் ஆர் எஸ் கிருத்திகா தேவி அவர்களை ஆதரித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். பிரச்சாரத்தின் போது ஐம்பதாவது வார்டு பகுதியில் நிர்வாகிகளை சந்தித்து உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தினர் இதில் கூட்டணி கட்சி நிர்வாகிகள், மகளிரணி யினர் உள்ளிட்ட கலந்து கொண்டனர். பிரச்சாரத்தில் கூட்டணி கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் உங்கள் வேட்பாளர் ஆர் எஸ் கிருத்திகா தேவி என இருசக்கர வாகனத்தில் கழக கொடியேந்தி வாக்குகளை சேகரித்தவாறு சென்றனர்.



# ஜோலார்பேட்டை மத்திய ஒன்றியத்தில் ஜோலார்பேட்டை தொகுதி திமுக வேட்பாளர் கவிதா தண்டபாணி தீவிரவாக்கு சேகரிப்பு

ஜோலார்பேட்டை, ஏப்.19-

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார் பேட்டை சட்டமன்ற தொகுதியின் திமுக வேட்பாளர் கவிதா தண்டபாணி ஜோலார் பேட்டை மத்திய ஒன்றியத்திற்குட்பட்ட சின்ன மூக்கனூர், தாமலேரிமுத்தூர், பால்நாங்க குப்பம், சாலை நகர், ஐயாத்து நகர் உள்ளிட்ட பகுதிகளில் தீவிர வாக்கு சேகரித்து சிறப்புரையாற்றி வருகின்றார். உடன் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளரும் ஒன்றிய கவுன்சிலர் செந்தில் குமார், கூட்டணி கட்சியான தேமுதிக நிர்வாகிகள், விடுதலை சிறுத்தை கட்சியின் நிர்வாகிகள், ஊராட்சி மன்ற தலைவர்கள், ஒன்றிய கவுன்சிலர்கள், கிளைக் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் என அனைவரும் கலந்து கொண்டு வாக்கு சேகரித்து வருகின்றனர்.







Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161